# அலகு – 2

## TT0102 குழந்தை உளவியலும் கல்வி உளவியலும்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

குழந்தையின் வளர்ச்சி நிலை மற்றும் மேம்பாடு குறித்தும், மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான திறன்களை அறிவதற்குரிய உளவியல் கோட்பாடுகள் குறித்தும் இவ்வலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- குழந்தைகளின் வளர்ச்சிப் படிநிலைகளை அறியலாம்.
- உளவியல் கோட்பாட்டின் அடிப்படையில் மொழி கற்பித்தலை விளக்கலாம்.
- தமிழ் மொழியைக் குழந்தைக்கு அறிய வைக்கலாம்.
- சிறப்புக் குழந்தைகளுக்கு அளிக்கும் பயிற்சியைப் புரிந்துகொள்ளலாம்.
- வாழ்வியல் திறன்களை அறிந்து கொள்ளலாம்.

| | பாட அமைப்பு |
|---|---|
| **2.0** | **பாட முன்னுரை** |
| **2.1** | **வளர்ச்சியும் மேம்பாடும்** |
| 2.1.1 | வளர்ச்சி |
| 2.1.2 | மேம்பாடு |
| 2.1.3 | வளர்ச்சி மேம்பாட்டில் சிறப்புத் தன்மைகள் |
| 2.1.4 | வளர்ச்சி மற்றும் மேம்பாடு – வேறுபாடுகள் |
| **2.2** | **மொழி கற்பித்தலின் உளவியல் கோட்பாடுகள்** |
| 2.2.1 | மொழி கற்பித்தலின் பொதுக்கோட்பாடுகள் |
| 2.2.2 | காக்னேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு |
| 2.2.3 | புரூணரின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு |
| 2.2.4 | பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **2.3** | **குழந்தையும் மொழித்திறனும்** |
| 2.3.1 | மொழித்திறன் வளர்ச்சி |
| 2.3.2 | உடல் வளர்ச்சி மற்றும் மொழி அறிதல் திறன் வளர்ச்சி |
| 2.3.3 | பள்ளியில் மொழித்திறன் பெறுதல் |
| 2.3.4 | குடும்பப் பின்னணியில் குழந்தையின் மொழித்திறன் |
| 2.3.5 | குழந்தையின் வட்டார மொழிவழக்கு |
| 2.3.6 | குழந்தையின் மொழிதிறனில் தகவல் தொடர்பு ஊடகத்தின் தாக்கம் |
| **2.4** | **உள்ளடங்கிய கல்வியும் கற்பித்தல் முறைகளும்** |
| 2.4.1 | உள்ளடங்கிய கல்வி |
| 2.4.2 | உள்ளடங்கிய கல்வியின் அடிப்படைக் கொள்கைகள் |
| 2.4.3 | உள்ளடங்கிய கல்வி அணுகுமுறைகள் |
| 2.4.4 | உள்ளடங்கிய கல்வியின் பயன்கள் |
| 2.4.5 | உள்ளடங்கிய கல்வியைச் செயல்படுத்துவதிலுள்ள இடர்ப்பாடுகள் |
| **2.5** | **குழந்தையும் வாழ்வியல் திறன்களும்** |
| 2.5.1 | வாழ்வியல் திறன்களின் முக்கியத்துவம் |
| **2.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 2.0 பாட முன்னுரை

மனிதர்களின் வளர்ச்சியையும், அவர்களின் நடத்தையையும் உறுதி செய்வது மரபும், சூழலும் ஆகும். மாற்ற முடியாதபடி பிறப்பிலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளதை மரபு என்றும், காலத்திற்கேற்பத் தொடர்ந்து மாற்றம் பெற்று, விரிவடைந்து காணப்படுவதைச் சூழ்நிலை என்றும் அறிஞர்கள் கருதுவர். மனிதனின் வளர்ச்சி, நடத்தை ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது இயற்கையா (மரபு), பராமரிப்பா (சூழ்நிலை) என்பதைப் பற்றி அறிஞர்களிடையே பல ஆண்டுகளாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் மரபுநிலையும், சூழ்நிலையும் இணைந்தே மனித வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன எனலாம். குழந்தையின் உடல், உள்ள வளர்ச்சி, மொழி கற்றலில் ஏற்படும் பின்னடைவிற்கான காரணங்கள், மொழித்திறன் வளர்ச்சி, வாழ்வியல் திறன்களை வளர்த்தல் ஆகியன இவ்வலகின்வழி அறியமுடிகிறது.

## 2.1 வளர்ச்சியும் மேம்பாடும்

மனிதனின் வளர்ச்சி மற்ற உயிரினங்களைப் போல் இல்லை. பிறந்தவுடன் ஆடோ, நயோ எழுந்து நடந்துவிடுகின்றன. ஆனால் ஒரு குழந்தை பிறந்தவுடன், எப்போது தவழும், நடக்கும், பேசும் போன்ற எதிர்பார்ப்புகள் பெற்றோருக்கும் பிறந்துவிடும். உண்மையில் ஒரு குழந்தையின் வளர்ச்சியானது ஒரு படிமுறையாகக் கட்டமைக்கப்பட்டதாகும். குறிப்பிட்ட காலத்தில்தான் (வயதில்) குறிப்பிட்ட செய்முறைகளைச் செய்வதற்குரிய ஆற்றல் அந்தக் குழந்தைக்கு உருவாகும். இவ்வாறு ஒவ்வொரு வயதிலும் ஒரு குழந்தை அடைய வேண்டிய ஆற்றல் அந்த வயதிற்குரிய வளர்ச்சி எல்லை (mile stone ) எனப்படுகிறது. இவ்வளர்ச்சி எல்லையானது குழந்தையின் உடல், உள்ளம், மொழி ஆகியவற்றை ஒருங்கிணைத்த செயல்பாடாகும். இவ்வளர்ச்சி நிலைகள் இவ்வலகில் விளக்கப்பட்டுள்ளன.

### 2.1.1 வளர்ச்சி

ஓர் உயிரியின் உருப்பெருக்கம் அல்லது அளவு அதிகரித்தலை 'வளர்ச்சி' (Growth) என்று கூறுகிறோம். ஒரு குழந்தை வளர்ச்சியடையும் போது அதன் உயரம், எடை, மொத்த கனபரிமாணம் ஆகியவை அதிகரிக்கின்றன. வளர்ச்சி என்பதன் கீழ்வரும் மாற்றங்களைப் புறவயத்தன்மையோடு உற்றுநோக்கவும், அளவிடவும் முடியும். மேம்பாடு(Development) என்பதன் ஓர் உட்கூறு வளர்ச்சியாகும். 'மேம்பாடு' என்பதன் அளவீட்டுக் கூறு வளர்ச்சியாகும்.

- **வளர்ச்சியின் இயல்புகள்**

    - ஓர் உயிரியின் உருவ அளவும், எடையும் அதிகரிக்கும்போது வளர்ச்சியடைவதாகக் கருதப்படுகிறது.
    - வளர்ச்சி, அளவீட்டுக்குட்பட்டதால், அது அதிகரிக்கும்போது பெருக்கம் ஏற்படுகிறது.
    - வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருப்பதில்லை; முதிர்ச்சிக்குப்பின் நின்று போகும்.
    - வளர்ச்சியால் முன்னேற்றம் ஏற்படவோ, ஏற்படாமலோ போகலாம்.
    - எடுத்துக்காட்டாக தொடை தசைகள் நன்கு வளர்ந்து வலுப்பட்டால் குழந்தை நடக்கத் தொடங்கும். மாறாகத் தொடை சதையில் கட்டிகள் தோன்றுவதால் எந்தவிதப் பயனுமில்லை.
    - வளர்ச்சி விகிதம் ஒரே சீராக இருப்பதில்லை. குழவிப் பருவத்தில் வளர்ச்சி அதிகமாகவும் பிள்ளைப் பருவத்தில் குறைந்தும் பின்பு குமரப்பருவத்தில் மீண்டும் அதிகரித்தும் காணப்படும்.
    - ஒரு குழந்தையின் வளர்ச்சி, பிற குழந்தைகளின் வளர்ச்சியிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது.
    - உடலின் வெவ்வேறு பாகங்கள் வேவ்வெறு விகிதத்தில் வளர்ச்சி பெறுகின்றன.

- **வளர்ச்சியின் படிநிலைகள்**

    1. குழவிப்பருவம் (Infant)
    2. பிள்ளைப்பருவம் (Childhood)
    3. குமரப்பருவம் (Adolescence)
    4. முதிர்பருவம் (Adulthood)
    5. நடுநிலைப் பருவம் (Middle age)
    6. தளர்வுறும் பருவம் (Senescence)
    7. கிழப்பருவம் (Old age)

என்பனவாம். இப்பருவங்கள் ஒவ்வொன்றும் வாழ்க்கையில் சில ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலர் 3 முதல் 7 ஆண்டுகளை முன் குழந்தைப் பருவம் என்றும், 7–11 ஆண்டுகளைப் பின் குழந்தைப் பருவம் என்றும் குறிப்பிடுவர்.

பிறப்பு முதல் ஐந்தாண்டு முடிவுறும் வரையிலான வளர்ச்சிப்பருவம் குழவிப்பருவமாகும். இப்பருவம் பிறவற்றிற்கு அடித்தளமாக அமைகிறது. ஐந்துக்கு மேல் (5+) சுமார் பன்னிரண்டு வயது வரைப் பிள்ளைப்பருவம் நீடிக்கிறது.

தொடக்கப்பள்ளி மாணாக்கர்கள் இப்பருவத்தினராவர். சில மனவியலறிஞர்கள் குழவிப்பருவம் 3 வயதுடன் முடிவடைகிறதெனக் கருதி, 3 முதல் 6 வயது வரையிலான வளர்ச்சி ஆண்டுகளை முன் பிள்ளைப் பருவமென்றும், 6 முதல் 12 வயது வரை பின் பிள்ளைப்பருவமென்றும் குறிப்பிடுகின்றனர்.

பிள்ளைப் பருவத்திற்கும் முதிர் பருவத்திற்குமிடையே (12+ முதல் சுமார் 18/20 வயதுவரை) உள்ளது குமரப்பருவம் ஆகும். இப்பருவத்தின் இறுதியில் ஒருவன் உடல், மற்றும் மன முதிர்ச்சி பெற்று முதிர் பருவத்தில் அடியெடுத்து வைக்கிறான். முதிர் பருவம் 20 ஆண்டில் பொதுவாகத் தொடங்கி 35 ஆண்டு வரை நீடிக்கிறது. இப்பருவத்தில் நம் உடலும் மனமும் முழுத்திறமையுடன் செயற்படும். 35 முதல் 65 ஆண்டு வரையிலான நடுநிலைப் பருவத்தில் வாழ்க்கையின் முழுமையான முன்னேற்றத்தை ஒருவன் சாதாரணமாக அடைகிறான். இதன் பின்னர், சுமார் 70 ஆண்டுகள் வரை மனிதனது உடற்சக்தியும் ஓரளவு மனத்திறன்களும் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கி, கிழப்பருவத்தை எட்டும். இது இறத்தலுடன் முடிவடைகின்றது.

பல்வேறு வளர்ச்சி நிலைகளுக்குப் பொருத்தமான கல்வி நிலைகள் பற்றி இங்குக் குறிப்பிடுதல் பயனுள்ளது.

| **வ. எண்.** | **வளர்ச்சிப் பருவம்** | **கல்வி நிலை** |
|---|---|---|
| 1. | குழவிப்பருவம் (பிறப்பு 3 வயது வரை) | பெற்றோரைச் சார்ந்து குடும்பத்தில் பல பயனுள்ள அனுபவங்களைப் பெறும் நிலை |
| 2. | முற்பிள்ளைப் பருவம் (3 –,5+ வரை ) | மழலையர் பள்ளி, மாண்டிசோரிப் பள்ளி, கிண்டர்கார்டன் பள்ளி, முன் ஆதாரப் பள்ளி, பால்வாடிப் பள்ளி |
| 3. | பிள்ளைப் பருவம் (5 + 12/14 வரை) | தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் தொடக்க வகுப்புகள் 1 முதல் 8 வரை |
| 4. | குமரப் பருவம் (12 + 18/20 வரை) | உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி |
| 5. | குமரப் பருவ இறுதியாண்டுகள் முதிர் பருவத் தொடக்க ஆண்டுகள் (18 – 21) | கல்லூரிக் கல்வி |
| 6. | முதிர்ப்பருவம் / நடுநிலைப் பருவம் | முறைசாராக் கல்வி, திறந்தவெளிக் கல்வி போன்றன. |

இன்று **வாழ் நாள் முழுவதும் கல்வி** என்னும் கருத்து கல்வியாளர்களால் வலியுறுத்தப்படுகிறது.

இப்பல்வேறு வளர்ச்சிப் பருவங்களுள் முதல் மூன்று அல்லது நான்கு பருவங்கள் பற்றி ஆசிரியர்கள் விவரமாக அறிந்து கொள்வது அவசியமாகும். இவை பற்றிச் சிறிது கவனம் செலுத்துவோம்.

### 2.1.2 மேம்பாடு

ஓர் உயிரியின் உருவத்திலோ அல்லது அமைப்பிலோ ஏற்படும் மாற்றங்களையும், அது இயங்கும் விதத்தில் ஏற்படும் மேம்பாடுகளையும் ஒட்டு மொத்தமாகக் குறிப்பதே 'மேம்பாடு' ஆகும். உயிரியின் செயல்பாட்டுத் தரத்தைக் குறிப்பதே மேம்பாடு ஆகும். வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல் இவற்றின் கூட்டு விளைவால் ஏற்படுவது மேம்பாடு ஆகும்.

- **மேம்பாட்டின் இயல்புகள்**
    - ❖ உயிரியல் முதிர்ச்சி, அனுபவங்கள் ஆகியவற்றின் விளைவாக நிகழும் வரிசைநிலையில் தொடர் மாற்றங்களைக் கொண்டது மேம்பாடு. எனவே மேம்பாட்டிற்குக் குறிப்பிட்ட வரிசைநிலையும், திசையும் உண்டு.
    - ❖ முன்னேற்றம் தொடர்ச்சியானது; வயது வந்தவுடன் அல்லது பூப்பெய்தியவுடன் நின்று விடுவதில்லை.
    - ❖ உயிரி இயங்குவதில் ஏற்படும் முன்னேற்றம், அது தன்னுடைய சூழ்நிலைக்கு இசைவாகச் செயல்பட துணைபுரிகிறது.
    - ❖ உயிரியின் பல்வேறு அமைப்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து மேம்பட்ட இயக்கத்தைக் கொடுப்பதே மேம்பாடு ஆகும்.
    - ❖ அறிவுசார் திறன்கள், நாட்டம், ஆர்வம், நுண்ணறிவு ஆளுமை போன்ற கூறுகளில் ஏற்படும் முன்னேற்றத்தில் தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன.
    - ❖ ஒருவரின் பல வளர்ச்சி நிலைகளில் காணப்படும் மேம்பாடு ஒரே சீராக இருப்பதில்லை.
    - ❖ வளர்ச்சியில்லாமலும் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எடுத்துகாட்டாக குள்ளமாக இருப்பவர்கள் கூட உடலியக்கத்தில் வலுவுடன் காணப்படுவர்.
    - ❖ மேம்பாடு ஒருவரது சூழ்நிலையால் பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது.
    - ❖ மேம்பாடு, தரத்தோடு தொடர்புடையதால், அதைத் துல்லியமாக அளக்க முடியாது; கணிக்க முடியும்.
    - ❖ மேம்பாடு பன்முகத் தன்மை கொண்டது.
    - ❖ மேம்பாடு தொடர் நேர்கோடாக அமையாமல், சுருள் வடிவில் அமைகிறது.

- **மேம்பாட்டின் பரிமாணங்கள்**

  மேம்பாட்டின் பரிமாணங்கள் பல நிலைகளில் உள்ளன. அவற்றுள் சில.

  குழந்தையின் முழுமையான வளர்ச்சி நிலைகள்

  1. உடல் மற்றும் செயல் வளர்ச்சி
  2. அறிதிறன் வளர்ச்சி
  3. மனவெழுச்சி வளர்ச்சி
  4. சமூக வளர்ச்சி
  5. ஒழுக்க வளர்ச்சி

### உடல் மற்றும் செயல் வளர்ச்சி

உடல் வளர்ச்சியில் உடற்கூறு வளர்ச்சி உடலியல் வளர்ச்சி என இரு வகைகளாகக் கூறுவர். உடலியல் வளர்ச்சி என்பது உயரம், எடை, எலும்பின் தன்மை, பார்த்தல், கேட்டல் போன்ற புலன் உறுப்புகளின் வளர்ச்சியினை குறிப்பதாகும். உடலில் இயங்க கூடிய பகுதிகளான இரத்த ஓட்டப்பகுதி, நரம்பு மண்டலம், சுவாச மண்டலம், தசைகளின் தொகுதி போன்றவற்றில் எழும் மாற்றங்கள் உடலியல் வளர்ச்சி எனப்படும். செயல் வளர்ச்சி என்பது குழந்தைகளின் கை கால்கள், உடலின் பல்வேறு தசைகள் போன்றன வலுப்பெற்று இணைந்த வகையில் இவை திட்டமாகவும் வேகமாகவும் செயற்படுதலைக் குறிப்பதாகும். இவற்றை கையாளும் திறன்கள் என்றும் கூறுவர். வேண்டும். அப்போதுதான் பன்மொழிப்புலமையை எளிதில் பெறமுடியும்.

உடல் வளர்ச்சிக்கும் செயல் வளர்ச்சிக்கும் இடையே நுண்ணிய வேறுபாடுகள் இருந்தபோதிலும், உடல் வளர்ச்சியும் செயல் வளர்ச்சியும் இணைந்தே ஏற்படுவதால், இவை பொதுவாக உடல் வளர்ச்சி என்றே குறிப்பிடப்படுகிறது.

### அறிதிறன் வளர்ச்சி

அறிதிறனின் கூறுகளான கற்பனை செய்தல், சிந்தித்தல், ஆராய்ந்தறிதல், புலன்காட்சி, நினைவிலிருத்தல், வேறுபடுத்துதல், பொதுமைப்படுத்துதல், தொடர்புபடுத்தல் ஆகியவற்றில் ஏற்படும் மேம்பாடுகளையும், அதனால் விளையும் பொருளறிவுப் பெருக்கத்தையும் குறிக்கின்றது. பள்ளிகளில் சிறு குழந்தைகளுக்குக் கற்பித்தலில் அவர்களது இயல்பான ஊக்கங்களைத் தூண்டும் வகையில் கள்பித்தல் முறை அமைதல் வேண்டும். விளையாட்டு முறை, கண்டறி முறை, செய்த் கற்றல் முறை, பல தரப்பட்ட காட்சி கேள்வி துணைக்

கருவிகளைக் கற்பித்தலில் பயன்படுத்துதல் போன்ற பாட இணைச் செயல்பாடுகள் பள்ளியில் அறிவு வளர்ச்சிக்கு உதவுவனவாகும்.

### மனவெழுச்சி வளர்ச்சி

குழந்தை பிறப்பின்போது இருக்கும் பொது மனவெழுச்சியான "பொதுவான பரபரப்பிலிருந்து', படிப்படியான வளர்ச்சி மூலம் பயம், கோபம், மகிழ்ச்சி, துக்கம், அன்பு, கருணை, அருவருப்பு போன்ற பல்வேறு மனவெழுச்சிகள் அமையப் பெற்று இவற்றை பொருத்தமான நேரத்தில் பொருத்தமான வெஜயில் வெளிப்படுத்தக் கற்று, உணர்ச்சிகளை கட்டுக்குள் வைத்திருக்கும் மனவெழுச்சி முதிர்ச்சிநிலையை அடைதலே மனவெழுச்சி வளர்ச்சி ஆகும்.

உடல் வளர்ச்சியில் உடற்கூறு வளர்ச்சி உடலியல் வளர்ச்சி என இரு வகைகளாகக் கூறுவர்

### சமூக வளர்ச்சி

பிறக்கும்போது மிருக இச்சையுடன் காணப்படும் குழந்தை, சமூக நெறிப்படுத்தப்பட்டு, தான் வாழும் சமூகத்தின் சட்டதிட்டங்களை மதித்து நடக்கும் பண்பைக் கற்றலையே இது குறிக்கின்றது. சமூகத்தில் பிறருடன் தொடர்பு கொண்டு இணக்கமான முறையில் பழகத் தேவைப்படும் திறன்கள் மெதுவாக வளர்ச்சி பெறுதல் சமூக வளர்ச்சி எனப்படும். சமூக உணர்வினைப் பெற்றுத் திகழ்தல் மற்றும் சமூகச்செயல்களில் பொறுப்புடன் பங்கேற்றல் ஆகியவை சமூக வளர்ச்சியில் அடங்கியுள்ள இரு முக்கிய நிலைகளாகக் கருதப்படுகின்றன.

### ஒழுக்க வளர்ச்சி

சமூக அறநெறிகளை அறிந்து அதன்படி ஒட்ட ஒழுகல் ஒழுக்க வளர்ச்சி எனப்படும. சரி, தவறு என்று பிரித்தறியும் திறனைப் பெற்று (ஒழுக்க உணர்வைப் பெற்று), தனக்கென ஒழுக்கக் கோட்பாட்டை அமைத்துக் கொள்வதையே ஒழுக்க வளர்ச்சி குறிப்பிடுகிறது. சமூக வளர்ச்சியும், ஒழுக்க வளர்ச்சியும் இணைந்தவை. சமூக நடத்தை, அறநெறிகளின் அடிப்படையில் அமைந்திருந்தால் அதன் பயனை அதிகரிக்க வல்லது. பல சமூகப் பண்புகள் சிறப்பான ஒழுக்கப் பண்புகளாகவும் உள்ளன. முழுமையான சமூகவியல்பு பெற்றவன் நல்லொழுக்கம் உடையவனாகவும் இருத்தல் வேண்டும். அறப்பண்புகளையும், ஒழுக்க மதிப்புகளையும் கல்வி வலியுறுத்த வேண்டும்.

### 2.1.3 வளர்ச்சி மேம்பாட்டில் சிறப்புத் தன்மைகள்

வாழ்வின் கால அளவு பல படிநிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிப்புகள் வளர்ச்சி, மேம்பாடு பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு ஏதுவாகப் பிரிக்கப் பட்டனவேயன்றி, தருக்க முறையிலான முறையன்று.

மேம்பாடு தொடர்ச்சியானது. ஒவ்வொருவரின் வாழ்விலும் மேம்பாடு படிநிலைகள் வெவ்வேறு வயதில் வெவ்வெறு விகிதத்தில் காணப்படுகின்றன. ஒவ்வொரு படி நிலையிலும் சில சிக்கல்கள் ஏற்படக்கூடும். அவற்றிற்கு அவ்வப்போது அடுத்த படிநிலையினை அடையும் முன்னர்த் தீர்வு காணவேண்டும். அவ்வாறு காணப்பட வில்லையாயின் முதிர்ச்சியின்மை, நெறி பிறழ்ச்சி ஆகியன தொடர்பான சிக்கல்கள் எழக்கூடும். வாழ்வின் கால அளவில் அமையும் மேம்பாட்டில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. ஆனால் பொதுவாக உளவியலாளர்கள் பகுத்துக் காட்டியுள்ள மேம்பாட்டுப் பிரிவுகள் கீழுள்ளவாறு அமையும்.

| வ. எண். | பிரிப்பு | கால அளவு |
|---|---|---|
| 1. | குழவிப் பருவம் | கரு உருவானதிலிருந்து பிறப்பு வரை |
| 2. | பிறப்பிற்கு முன் | கரு உருவானதிலிருந்து பிறப்பு வரை |
| 3. | குழந்தைப் பருவம் | இரண்டாவது வாரம் முதல் 2 ஆண்டுகள் வரை |
| 4. | பிள்ளை முன் பருவம் | 2 வயது முதல் 6 வயது வரை |
| 5. | பிள்ளை பின் பருவம் | 6 வயது முதல் 12 வயது வரை |
| 6. | பூப்புப் பருவம் | 12 வயது முதல் 13/14 வயது வரை |
| 7. | குமரப் பருவம் | 13/14 வயது முதல் 18 வயது வரை |
| 8. | இளமை முன் பருவம் | 18 வயது முதல் 40 வயது வரை |
| 9. | நடுப்பருவம் | 40 வயது முதல் 60 வயது வரை |
| 10. | முதிர் அல்லது தளர்ச்சிப் பருவம் | 60 வயது முதல் இறப்பு வரை |

வாழ்வுக் காலம் பத்துப் பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பத்துள், பள்ளிக்கூட வயதினைப் பிள்ளை முன்பருவம், பிள்ளைப் பின் பருவம், குமரப் பருவம், ஆகியன பற்றி மட்டும் இங்குக் காணப்படுகிறது. இப்பருவங்களில், உடல், அறிவு, சமூகம், மனவெழுச்சி ஒழுக்கம் ஆகியன சார்ந்த மேம்பாடுகள் இப்பகுதியில் காணப்படுகின்றன. மேலும் அறிவு சார் மேம்பாடு தொடர்பாகப் பியாஜே, புருனர் ஆகியோர் வெளிப்படுத்திய கருத்துகளும் இப்பகுதியில் காணப்படுகின்றன. இனி அப்பருவங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் மேம்பாடு பற்றிக் காண்போம்.

- **பிள்ளை முன் பருவம்**

பிள்ளை முன்பருவத்தில் பல் வகைப்பட்ட மேம்பாடுகளின் தன்மைகள் தொகுப்பு:

அட்டவணை – 1

| அ<br>உடல் திறன்<br>(செயல்திறன் மேம்பாடு) | ஆ<br>அறிதிறன் மேம்பாடு | இ<br>மனவெழுச்சி மேம்பாடு | ஈ<br>சமூக மேம்பாடு | உ<br>ஒழுக்க மேம்பாடு |
|---|---|---|---|---|
| வளர்ச்சி குறைவான விகிதத்தில் ஏற்படுகிறது. | சூழ்நிலைகளை அறியும் ஆர்வம், புதிய பட்டறிவை எதிர்கொள்ளும் விருப்பம் ஆகியன காணப்படுகின்றன. | புலம்படு பொருள் சார்ந்து மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் திறன். | சுயச்சார்பு உணர்வு மேம்படுகிறது. | தான் செய்த செயல்களின் விளைவுகளிலிருந்து அளவை சரி, தவறு என முடிவுக்கு வருதல். |
| பிற பருவங்களை நோக்க வளர்ச்சியில் சீரான தன்மை காணப்படுகிறது. | உடல், சமூக நடைமுறை சார்ந்த பொருண்மைகளைப் புரிதல். | மனவெழுச்சிகள் தற்காலிகமானவை. | வீட்டிலிருந்து அதற்கு அப்பாற்பட்ட சமூகச் சூழல்கள் விரிவடைகின்றன. | பிறரைத் தன்பால் ஈர்க்க வேண்டும் எனும் விருப்பு, கீழ்ப்படியாமை, வழியாக வருவது. |
| நடு உடல் (Trammel) பெரியவர்களைப் போன்றே விகித அளவில் வளர்கிறது. | பருமன், அளவு, நிறம், நேரம், தொலைவு, ஆகியன பற்றிய அறிவு ஏற்படுகிறது. | மனவெழுச்சிகளை மறைப்பதற்கு இயலாத பருவம் | இரு பாலினக் குழந்தைகளும் சேர்த்து விளையாடுவர். | மிகவும் செல்லத்தோடு வளர்க்கப்படும்போது தன் நலம் மிக்க நிலையிலும், எதிர்ப்புத்தன்மையுடனும், அடுத்தவர் உரிமைகளை மதியாதவாறும் இருப்பர். |

| அ<br>உடல் திறன்<br>(செயல்திறன் மேம்பாடு) | ஆ<br>அறிதிறன் மேம்பாடு | இ<br>மனவெழுச்சி மேம்பாடு | ஈ<br>சமூக மேம்பாடு | உ<br>ஒழுக்க மேம்பாடு |
|---|---|---|---|---|
| ஏறுதல், குதித்தல், எறிதல், பந்தைப் பிடித்தல் முதலிய செயல்திறன் மேம்பாடுகள் ஏற்படுகின்றன. | நினைவாற்றல் பெறுகிறது. இப்பருவத்தில் குருட்டு மனப்பாடத்திறன் ஏற்படுகிறது. | இப்பருவத்தில் அறியப்படும் பொதுவான மனவெழுச்சிகள்: சினம், அச்சம், பொறாமை, ஆர்வம் (Curiosity), வெறுப்பு, மகிழ்ச்சி, மற்றும் பாசம். | குழு விளையாட்டு, செயல்பாடுகளில் விருப்பம் கொள்வர். | கண்டிப்பாக வளர்க்கப்படுவோர், மிகவும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருப்பர். இந்நிலை பெற்றோரிடம் தான்; மற்றவரிடம் எதிர்ப்புணர்வோடு இருப்பர். |
| தசைகளின் மேம்பாடு விரைவான வேகத்தில் ஏற்படுகிறது. | படைப்பாற்றல் திறன் ஏற்படத் தொடங்குகிறது. | தன்னடக்க மனப்பான்மை பெற்றுப் பிற பிள்ளைகளோடு பழகுதல். | நண்பர்களோடு ஒத்துழைத்தல், கூட்டுணர்வு முறையில் செயல்படுத்தல், ஒரே தன்மையான பண்பு கள் கொண்டாரோடு சேர்தல். | |
| தானே உண்ணுதல், தானே உடையணிதல், குளித்தல், பல்துலக்கல், விளையாடுதல், பொம்மைகள் கொண்டு விளையாடுதல் முதலிய செயல்திறன்கள் ஏற்படுகின்றன. | அறிவு சார்ந்த செயல்பாடுகளில் நீண்ட நேரம் ஈடுபட முடிகிறது. | தங்களின் செயல்பாடுகளுக்குச் சமூக இசைவினை எதிர்பார்த்தல். | தேவதைக் கதைகள், விலங்குகள் பற்றிய கதைகள் முதலியனவற்றை விரும்புதல். | |

| அ<br>உடல் திறன்<br>(செயல்திறன் மேம்பாடு) | ஆ<br>அறிதிறன் மேம்பாடு | இ<br>மனவெழுச்சி மேம்பாடு | ஈ<br>சமூக மேம்பாடு | உ<br>ஒழுக்க மேம்பாடு |
|---|---|---|---|---|
| பால் பற்கள் விழுந்து நிரந்தரப் பற்கள் நிலைக்கத் தொடங்குகின்றன. | சூழ்நிலை பற்றிய வினாக்களைக் கேட்கத் தொடங்குகிறது. | | விளையாட்டு வழி சமூக உறவை ஏற்படுத்துதல். | |
| | குறியீடுகள், மொழித் திறன், வரைதல், சிக்கல் தீர்வு தொடர்புகளைப் புரிந்து தீர்வு காணல் முதலிய திறன்கள். | | | |
| | பொருண்மைகளைப் புரிந்து கொள்ளும் திறன் இப்பருவத்தில் நிகழும் சிறப்பு. | | | |

### 2.1.4 வளர்ச்சி மற்றும் மேம்பாடு – வேறுபாடுகள்

| வ. எண். | வளர்ச்சி | மேம்பாடு |
|---|---|---|
| 1. | வளர்ச்சி என்பது உடல் உறுப்புகளின் பெருக்கத்தால் ஏற்படுகிறது. எனவே அதை மிகத் துல்லியமாக அளந்துவிடலாம். | மேம்பாடானது ஓர் உயிரியின் அமைப்பிலும், செயற்பாட்டிலும் தோன்றும் மாற்றங்களால் ஏற்படுவது. |
| 2. | வளர்ச்சி என்பது புறவயாத்தன்மை கொண்டது. எனவே, உற்றுநோக்கலின் மூலமாக அதனைக் கண்டறிந்துவிடலாம். | மேம்பாடு என்பது அதன் தரத்தோடு இணைந்ததால் அவற்றைத் துல்லியமாக அளவடுதல் என்பது இயலாது. மனிதனின் நடத்தைக் கோளங்களை தொடர்ந்து கவனிப்பதின் மூலமாக முன்னேற்றத்தைக் கண்டறிய முடியும். |
| 3. | வளர்ச்சி என்பது வாழ்நாள் முழுவதுமான தொடர் செயல்பாடு அல்ல. மனிதன் பருவ முதிர்ச்சி அடைந்தவுடன் வளர்ச்சியானது நின்றுவிடும். | மேம்பாடு என்பது ஒரு மனிதன் அவன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ஏற்படக் கூடிய ஒன்று. |
| 4. | வளர்ச்சி என்பது மேம்பாட்டின் ஓர் உட்கூறு ஆகும். | மேம்பாடு பலவகையான தன்மைகளைக் கொண்டது. சிக்கல் மிகுந்தது. |
| 5. | மனிதனின் உடலில் உள்ள அனைத்துப் பாகங்களிலும் வளர்ச்சி ஏற்படுகிறது. | அனைத்து உயிரினங்களின் தொடர் இயக்கத்தால் ஏற்படும் ஒட்டுமொத்த மாறுபாடே மேம்பாடு எனப்படும். |
| 6. | வளர்ச்சி எப்பொழுதும் ஒரே திசையில் அமைவதன்று. | மேம்பாடானது ஒரு வரிசைமுறையில் திசையுடன்கூடிய மாற்றத்தைக் கொண்டது. |
| 7. | வாழ்க்கையின் எல்லாப் பருவங்களிலும் வளர்ச்சி விகிதமானது ஒரே சீரான முறையில் அமைவதில்லை. | மேம்பாட்டின் விகிதமும் வாழ்க்கையின் அனைத்துப் பருவங்களிலும் ஒரே சீரான முறையில் அமைவது இல்லை. |
| 8. | தனியாள் வேற்றுமையானது வளர்ச்சியில் காணப்படும். | உடல், அறிவு, ஒழுக்கம், சமூக உணர்வு, மன எழுச்சி போன்ற பல்வகை முன்னேற்றங்கள் குழந்தைகளின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். |
| 9. | வளர்ச்சி என்பது மரபினால் மட்டுமே பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது. | மேம்பாட்டினைது தீர்மானிப்பதில் கல்வி அறிவும் அனுபவங்களுமே முக்கியப் பங்கு பெறுகின்றன. |

| வ. எண். | வளர்ச்சி | மேம்பாடு |
|---|---|---|
| 10. | முன்னேற்றத்திற்கு வளர்ச்சியானது ஒரு வழிகோலாக இருக்கலாம். அல்லது இல்லாமலும் போகலாம். | ஒரு குறிப்பிட்ட வகையிலான மேம்பாடானது பிற மேம்பாடுகளின் பிற சூழல்களில் ஏற்படும் மேம்பாடுகளுக்கு துணை நிற்கிறது. அனைத்து மேம்பாடுகளும் ஒருங்கிணைந்து காணப்படுகின்றன. |

## 2.2 மொழி கற்பித்தலில் உளவியல் கோட்பாடுகள்

அனைத்து மாணவர்களும் ஒரே அளவில் மொழியைக் கற்பதில்லை. மாறாக அவர்களின் உள்ளார்ந்த திறன்களின் அடிப்படையில் அவர்களின் கற்கும் ஆற்றல் இருக்கும். அத்திறன்களைக் கண்டறிந்து மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்துவது பற்றி ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும். அத்திறன்களை அறிவதற்கு உளவியல் கோட்பாடுகள் ஆசிரியர்களுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

### 2.2.1 மொழி கற்பித்தலில் பொதுக்கோட்பாடுகள்

1963ஆம் ஆண்டு ஜெரோம் புரூணர் முதன்முதலில் கற்பித்தல் கொள்கைகள் என்ற சொல்லை உருவாக்கினார். பின்னர் 1965இல் இச்சொல் பிரபலமடையத் தொடங்கியது. கற்பித்தல் வளர்ச்சிக்குக் கற்பித்தலுக்கான உளவியல் கொள்கைகள் அடித்தளமிட்டுள்ளன. மனிதனின் நடத்தையில் கல்வியால் மட்டுமே மாற்றங்களைக் கொண்டு வரமுடியும். கல்வியும், கற்றலும் பிரிக்க இயலாதவை. எனவே கற்பித்தலுக்கான உளவியல் கொள்கைகளை ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

பேட்டர்சன் என்பவரின் கூற்றுப்படி கற்பித்தலில் ஒருங்கிணைப்பை உளவியல் கொள்கைகளே அளிக்கின்றன. கற்பித்தலுக்குத் தேவையான முறைகளைக் கையாள உதவுகின்றன. ஆராய்ச்சிக்கும் அவையே படிநிலைகளை அமைத்துக் கொடுக்கின்றன. ஆசிரியப்பயிற்சி மாணவர்களுக்குக் கற்பித்தல் நுட்பங்களை உளவியல் கொள்கைகளே உணர்த்துகின்றன. பல உளவியலறிஞர்கள் கற்பித்தலுக்கான கொள்கைகளை வகுத்துள்ளார்கள். அவர்களுள் காக்னே, புரூணர், பியாஜே ஆகியோருடைய கற்பித்தலுக்கான உளவியல் கொள்கைகள் இங்கு ஆராயப்படுகின்றன.

### 2.2.2 காக்னேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

காக்னே அவருடைய "கற்றலுக்கான சூழல்" என்னும் நூலில், கற்றலில் ஏற்படக்கூடிய எட்டுவகையான கற்றல் மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளதையும் கண்டறிந்தார்.

- **காக்னேயின் கற்றல் படிநிலைகள்**

இராபர்ட் எம்.காக்னே கற்றலை எட்டு வகையாகப் பிரித்துள்ளார். எளிமையான கற்றலில் தொடங்கிச் சிக்கலான பிரச்சனைகளைத் தீர்க்கக் கற்றுக்கொள்ளுதல் வரை வரிசைக்கிரமத்தில் அமைந்துள்ளன. அவை

1. **குறியீட்டுவழிக்கற்றல்**: பாவ்லோவின் ஆக்கநிலையுறுத்தல் கொள்கைப்படி கற்றலில், தனிநபர் ஒரு குறியீட்டுக்குத் துலங்கலை வெளிப்படுத்துவதைக் கற்றுக் கொள்கிறான்.
2. **தூண்டல் – துலங்கல் மூலம் கற்றல்** : தார்ண்டைக்கின் தூண்டல் துலங்கல் மூலம் கற்றல் சோதனையையும், ஸ்கின்னரின் செயல் தொடர்புடைய துலங்கலையும் இக்கற்றல் முறைக்குச் சான்றுகளாகக் கூறலாம்.
3. **இணைப்புக் கற்றல்** : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தூண்டல் துலங்கல்களை இணைப்பதன் மூலம் கற்றல் நிகழ்தல்.
4. **சொற்களின் கூட்டிணைப்பு** : சொற்களைப் பொருத்தமாக இணைத்தலைக் கற்றுக் கொள்ளுதல்.
5. **வேறுபாடறிதல்**: ஒரே மாதிரியான பல்வேறு தூண்டல்களைக் கண்டறிந்து, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகையான துலங்கலை வெளிப்படுத்தும் வேறுபாடுகளை அறிதல்.
6. **கருத்துகள் உருவாவதைக் கற்றல்**: தூண்டல் வகைகளுக்கிடையே உள்ள பொதுமைப்பண்புகளை உணர்ந்து, அதனடிப்படையில் பொதுமைக் கருத்துகளைக் கற்றல்.
7. **விதியைக் கற்றல்**: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துகளை இணைத்து, விதியைக் கற்கும் பொழுது, கொள்கைகளைக் கற்றலும் நிகழ்கிறது.
8. **சிக்கலைத் தீர்த்தல்** : காரணமறிதல், சிந்தனை, உற்றுநோக்கல், வேறுபடுத்துதல், பொதுமைப்படுத்துதல் போன்ற அறிவுத்திறன்களின் மூலம் சிக்கலைத் தீர்க்கக் கற்றுக்கொள்ளுதல் நிகழ்கிறது.

காக்னே, கற்பித்தலின் நான்கு முக்கியக் கூறுகளையும் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் தன்னுடைய கற்பித்தல் செயலில் இவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார். அவை:

1. முன்பு கற்ற பாடப் பொருளை நினைவு கூரத் தூண்டுதல்.
2. பொருத்தமான தூண்டலை நேரடியாக அளித்தல்.
3. நிர்ணயிக்கப்பட்ட கற்றல் இலக்குகளைச் செயல்படுத்துதல்.
4. பின்னூட்டம் பெறுதல்.

- **காக்னேயின் கற்றல் படிநிலைகள்**

ஆசிரியர்களே கற்பித்தல் பொருளின் வடிவமைப்பாளர்கள், மேலாளர்கள் மற்றும் மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்பவர்கள் என்று காக்னே கருதினார். எனவே கற்பித்தல் என்பது ஆசிரியர்களின் திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தலை உள்ளடக்கியது. கற்பவர்களின் தேவைக்கேற்பக் கற்றல் சூழலை ஒழுங்குப்படுத்துவதே கற்பித்தல் எனலாம். கருத்துகள் உருவாவதைக் கற்றல், விதியைக் கற்றல், சிக்கலைத் தீர்த்தல் ஆகியவற்றுக்கே பெரும்பாலான பள்ளிப்பாடங்கள் முக்கியத்துவம் அளிப்பதை ஆராய்ச்சியின் மூலம் அறிந்தார் காக்னே. எனவே கற்றல் செயலிலும் எட்டு நிலைகளை அவர் விவரிக்கிறார். அவை :

1. ஊக்குவித்தல்
2. புரிந்து கொள்ளுதல்
3. முயன்று அடைதல்
4. விடாது வைத்திருத்தல்
5. நினைவுகூர்தல்
6. பொதுமைப்படுத்துதல்
7. செயல்திறன்
8. பின்னூட்டம்

காக்னே கற்றல் செயல் இயல்பாகவோ அல்லது பின்னூட்டம் பெற்றோ முடிவடைய வேண்டும் என்று கருதினார்.

### 2.2.3 புரூணரின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

கற்பித்தல் கொள்கை என்பது அறிவை அடைவதற்குரிய விதிகளையும், திறன்களையும், அளவிடுதல் நுட்பங்களையும் விளக்கக் கூடியதாக இருக்க

வேண்டுமென்று புருணர் சுட்டியுள்ளார். கற்பித்தல் கொள்கை நான்கு கூறுகளைக் கொண்டிருக்க வேண்டுமென்கிறார். அவை :

1. **கற்றலுக்கு முன்பே விரும்பும் நிலை** : ஒரு குழந்தை பள்ளிக்கு வரும்பொழுது அக்குழந்தை தானே கற்கும்படியான ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய பாடப் பொருள்களையும், அனுபவங்களையும் கற்பித்தல் கொண்டிருக்க வேண்டும்.

2. **அறிவு அமைப்பு** : கற்போரால் உட்கிரகித்துக் கொள்ளும் வகையில் கற்பித்தல் கொள்கைகள் குறிப்பிட்ட வகையில் அமைக்கப்பட வேண்டும்.

3. **வரிசைக்கிரமம்** : பாடப்பொருளை அளிக்க வேண்டிய வரிசைமுறை பற்றிக் கற்பித்தல் கொள்கைகள் குறிப்பிட வேண்டும்.

4. **வலுவூட்டுதல்** : கற்பித்தல் கொள்கை மாணவர்களை அறியாதவற்றிலிருந்து அறிந்தவற்றுக்கு இட்டுச்செல்லும் பொழுது எத்தகைய வலுவூட்டம் அளிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும். அறிவு வளர்ச்சி நிலையில் புருணர் மூன்று நிலைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை:
   - ❖ **செயல்படுநிலை** : கற்றல் செயல்களைச் செய்வதன் மூலம் நிகழ்கிறது. இதற்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டிக் கற்றுக் கொள்வதைக் கூறலாம்.
   - ❖ **உருவகநிலை** : புலன்காட்சி வழி, மனதுக்குள்ளேயே சாயல்களைப் பயன்படுத்திக் கற்றல் நடைபெறுகிறது.
   - ❖ **குறியீட்டு நிலை** : செயல்களை மொழியாக மாற்றி, இணைத்துக் கற்கும் நிலையே குறியீட்டு நிலை. ஒருவரின் தற்கருத்து வளர்ச்சி, அவருடைய உலகிலுள்ள பொருள்களின் சாயல்களைப் பொறுத்தது.

நாம் எவ்வாறு அறிவை அளிக்கிறோம், எவ்வாறு கற்பவரை அவருடைய கற்றல் நிலைக்கேற்ப வழிநடத்துகிறோம் என்பதற்கேற்பவே அறிவு வளர்ச்சி இருக்கும் என்பது புருணரின் கோட்பாடாகும்.

### 2.2.4 பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

ஜீன் பியாஜே என்னும் சுவிட்ஸர்லாந்து உளவியலறிஞர் குழந்தையின் சிந்தனை மற்றும் அறிவு வளர்ச்சி பற்றிப் பொதுமைக்கருத்துகளை

அறிவித்துள்ளார். அவரது கருத்துப்படி, குழந்தையின் வயதுக்கேற்ப, பல்வேறு படிநிலைகளில் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. இவருடைய அறிவுக்கோட்பாடு அறிவின் எல்லை மூலம் மரபியல் வழி மனிதனின் அறிவு மூலம் எல்லை, பண்புகளை அறியும் பண்புகளை ஆய்வாகக் கொண்டுள்ளது. அறிவு வளர்ச்சியில் உயிரியல் மரபுக் கூறுகளும், சூழலும் கொண்டுள்ள இடைவினை பற்றி இவரது ஆராய்ச்சி அமைந்தது. பியாஜே, அனைத்து அறிவு வளர்ச்சியும் மூன்று செயல்களால் நிகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். அவை

1. **தன்வயப்படுத்துதல்** : புதியதாகப் பெறும் தகவல்களை, தான் ஏற்கனவே பெற்றுள்ள அறிவு அமைப்புடன் குழந்தை பொருத்திக் கொள்ளுதல்.
2. **பொருந்துதல்** : புதிய தகவல்களுக்கேற்ப ஏற்கனவே உள்ள அறிவு அமைப்பை மாற்றி, அதனோடு இயைந்து செல்லுதல்.
3. **சமநிலைப்படுத்துதல்** : தன் வயப்படுதலுக்கும், பொருந்துதலுக்கும் இடையே அறிவினைச் செயல்படுத்துவதிலே உண்டாகும் சமநிலையே சமநிலைப்படுத்தலாகும். ஒரு குழந்தை ஏற்கனவே தான் உள்ள சூழலுக்கும், புதிய கற்றல் சூழலுக்கும் இடையே தன்னைச் சமநிலைப்படுத்திக் கொள்கிறது. மேலே சொன்ன மூன்று செயல்களாலும், குழந்தை தகவமைப்பைப் பெறுகிறது.

- **பியாஜே குழந்தையின் அறிவு வளர்ச்சி**
    1. புலனியக்கநிலை (பிறப்பு முதல் 2 வயது வரை)
    2. செயலுக்கு முந்தைய நிலை (2 முதல் 7 வயது வரை)
    3. பருப்பொருள் செயல்படும் நிலை (7 முதல் 12 வயது வரை)
    4. கருத்தியல் நிலை (12 வயதுக்கு மேல்)

**புலனியக்கநிலை** : இந்நிலையில் குழந்தை தனக்கென்று ஓர் உலகத்தை உருவாக்கிக்கொள்கிறது. அதில் அதனுடைய உடல் தேவைகளும், புலன் உணர்வும் குழந்தையின் கற்றலுக்கு வழிவகுக்கிறது. இந்நிலையில் குழந்தை தன்னைச் சுற்றி என்ன நிகழ்கிறது என்று சிந்திப்பதைவிடப் புலன்களை இயக்கிக் கற்றுக்கொள்கிறது. எட்டு மாதத்திற்குப் பிறகு குழந்தை பொருள்களின் நிலைத்த தன்மை பற்றி அறிகிறது. அடிப்படை நினைவு தோன்ற ஆரம்பித்த உடன் பிறரைப் போலவே தானும் செய்யக் கற்றுக்கொள்கிறது.

**செயலுக்கு முந்தைய நிலை** : இந்நிலையில் மொழி வளர்ச்சி உருவாகிறது. பொருட்கள் மற்றும் செயல்கள் பற்றிக் குழந்தை சிந்திக்க ஆரம்பிக்கிறது. இதில் கருத்துக்கு முந்தியநிலை, உள்ளுணர்வு தோன்றும் நிலை என்ற இரண்டு நிலைகள் அடங்கியுள்ளன. அறிவுநிலை வளர்ச்சி என்பது பெரியவர்களைக்

கண்டு போலச்செய்வதாலும், குறியீடுகளைப் பயன்படுத்துவதாலும் நிகழும். குழந்தையின் காரணம் கண்டறிதலில் நெகிழ்ச்சியோ, முன்பின் மாற்றமோ இருக்காது. குழந்தை தன்னை மட்டுமே மையமாகக் கொண்டு சிந்தித்துச் செயல்படும். உயிரற்ற பொருட்களுக்கு, உயிருள்ளதாகக் குழந்தை பாவித்துக்கொண்டு, அவற்றோடு பேசுதல், விளையாடுதல் போன்ற செயல்களைச் செய்யும்.

**பருப்பொருள் செயல்படும் நிலை :** இந்நிலை 7 வயது முதல் 12 வயத வரை இருக்கும். இந்நிலையில் குழந்தைகளுக்குக் காரணத்தோடு சிந்தித்தலும், தன்னிலை முனைப்புக் குறைதலும் நிகழும். இந்நிலையின் முக்கியக்கூறுகள்.

- பகுத்தறிதலும், தொகுத்தறிதலும் நடைபெறும்.
- சிந்திப்பதில் நெகிழ்ச்சி இருக்கும்.
- பொருள்களின் பயனைப் புரிந்துகொள்ளும் திறன் வளரும்.
- வரிசைப்படுத்தலும், வகைப்படுத்தலும் குழந்தையிடம் நிகழும்.
- ஒரு செயலின் முன்பின் மாற்றங்களைக் குழந்தை உணர ஆரம்பிக்கும்.

**கருத்தியல் நிலை :** இந்நிலையில் குழந்தை தன் எதிரில் இல்லாத பொருட்களையும், நடக்காத நிகழ்வுகளையும் பற்றிக் கற்பனையாகச் சிந்திக்கத் தொடங்கும். குழந்தையின் சிந்தனை முறைப்படியும், காரணங்கள் அடிப்படையிலும் ஒருங்கிணையத் தொடங்கும். இந்நிலையில் பின்வரும் கூறுகள் அமைந்துள்ளன.

- பருப்பொருள் சிந்தனை
- முறைப்படுத்தப்பட்ட தீர்வுகளைக் கொண்டிருத்தல்
- சிக்கலைத்தீர்த்தல்
- அறிவு மாற்றம் பெறுதல்

| **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
|---|
| 1. வளர்ச்சியின் இயல்புகள் யாவை? |
| 2. வளர்ச்சியின் படிநிலைகளை எழுதுக. |
| 3. மேம்பாட்டின் இயல்புகள் யாவை? |
| 4. மேம்பாட்டின் பரிமாணங்கள் குறித்து எழுதுக. |
| 5. வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் வேறுபாடுகளை எழுதுக. |
| 6. காக்னேயின் கற்றல் படிநிலைகள் குறித்து எழுதுக. |

## 2.3 குழந்தையும் மொழித்திறனும்

குழந்தைகளை நல்லமுறையில் கற்பிக்க வேண்டுமாயின், அவை வளரும் பல்வேறு சூழ்நிலைகளும் அவ்வளர்ச்சிக்கு ஏற்புடையதாக அமைதல் வேண்டும். வளர்ச்சி பற்றிய பொதுவிதிகளை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியையும் தனித்தனியாகவும் கவனித்தல் வேண்டும். கற்கும் குழந்தையை ஆசிரியர் நன்கு புரிந்துகொண்டால் வகுப்பறையில் கற்றல் செயலும் கற்பித்தல் செயலும் செம்மையாக நடைபெறும். ஆசிரியர்கள் நன்கு புரிந்துகொண்டு உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூகமனப்பான்மை ஆகியவற்றை அறிந்துகொண்டு குழந்தைகளின் மொழித்திறன்களை வளர்ப்பதற்காகத் திட்டமிட்டுச் செயல்படவேண்டும்.

### 2.3.1 மொழித்திறன் வளர்ச்சி

மனிதனது சிறப்புப் பண்புகளில் மிகவும் உயர்நிலைப்பட்டது அவனது மொழித்திறன் எனலாம். மொழி, கருத்து தொடர்புக்கான (communication) கருவியாகவும் சிந்தனையை அண்மைச் சூழ்நிலைக்கு அப்பாலும் செலுத்திப் பயன்பெற உதவுவதாகவும் உள்ளது. மொழித்திறன் வளர்ச்சிக்கு அடிப்படையாக அவனது அறிவாற்றலுடன் சில உடலுறுப்புகளின் (குரல்நாண், நா, நுரையீரல் போல்வன) பண்புகளும் உதவுகின்றன. பல்வேறு வகை ஒலிகளை எழுப்புவதுடன் கேட்கும் ஒலிகளைத் தரம் பிரித்துணர்தலில் (discrimination) மனிதனது பெருமூளை பெற்றுள்ள திறமையும் உதவுகிறது. மனிதனால் கருத்துப்பரிமாற்றத்துக்கு உதவும் வகையில் பெருமளவு செயற்கையாக உருவாக்கப்பட்ட குறியீடுகளின் (symbols) தொகுப்பாக 'மொழி' (language) உள்ளது.

மொழிக்கும் சிந்தனைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பேச்சுமொழி வளரவளர அதனுடன் இணைந்து வரிவடிவ எழுத்துமொழியும் வளர்ச்சி பெறுகிறது. துகுறித்து அறிஞர்கள் 3 பண்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

- மொழிச்சொற்கள் இடம் (place), காலம் (time) ஆகியவற்றுக்குக் கட்டுப்படாமல் அவற்றிற்கு அப்பாற்பட்டு இருத்தல் வேண்டும்.
- மொழிச்சொற்கள் பொருளுள்ளவையாக விளங்குதல் வேண்டும்.
- இதன் சொற்களை இணைத்துப் பல புதிய கருத்துகளை குறிப்பிட உதவும் பண்பினையும் பெற்றிருக்க வேண்டும்.

குழந்தையின் மொழித்திறன் வளர்ச்சி வியக்கத்தக்க ஒன்றாகும். மொழி வளர்ச்சியின் வீதம் (Rate), வேகம் (speed) ஆகியவற்றில் குழந்தைகளிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. மொழித்திறன் வளர்ச்சியில் அடுத்தடுத்த கட்டங்களின் ஒரு கால முறைப்படி (sequence) நிகழ்கின்றன. எனவே, மொழித்திறனின் அடிப்படையாக முதிர்ச்சி பெறுதல் உள்ளது என்பது பொருந்தும். குழந்தை (10–14) மாதங்களில் எளிய சொற்களைப் பேசத் தொடங்குகிறது. இதற்கு முன்னரே, சிறு குழந்தைகள் தங்களது தேவைகளைப் பிறருக்கு (சிறப்பாகத் தாய்க்கு) அறிவிக்கப் பலவித ஒலிகள், சைகைகள், அழுகை போன்றவற்றைப் பயன்படுத்தக் கூடும். பேச்சுத்திறன் வளர வளர இவற்றின் பங்கு குறைகிறது. தொடக்கத்தில் சிறு குழந்தை எவ்வாறு மொழிச் சொற்களை கற்கிறது என்பது பற்றி ஸ்கின்னர் என்பார் மூன்று படிநிலைகளைச் சுட்டுகிறார்.

1. பிறர் எழுப்பும் ஒலியைப் பின்பற்றிச் சிறு குழந்தை அதே மாதிரியான ஒலியினை எழுப்புகிறது. இதற்குப் பெற்றோர்களது பாராட்டினைப் பெறுகிறது.
2. சிறு குழந்தை இவ்வாறு எழுப்பும் ஒலிகளுக்கு ஏற்ப பொருள்களை இணைத்து அது குறிப்பிடும்போது பாராட்டுதலைப் பெறுகிறது. எனவே, ஒலி – பொருள் தொடர்பு வலுப்பெறுகிறது.
3. இதன் விளைவாக மொழிச்சொற்களை அவற்றுக்கான பொருள்கள், பண்புகள், செயல்கள் ஆகியவற்றுடன் தொடர்புப்படுத்திப் பேச முற்படுகிறது.

சுமார் 1½ ஆண்டில் 10–15 எளிய சொற்களை குழந்தை கற்றுப் பயன்படுத்துகிறது. அடுத்த 3–4 மாதங்களில் அதன் சொற்களஞ்சியம் (vocabulary) வேகமாக அதிகரிக்கிறது. சுமார் 12 வயதிற்குள் சுமார் 10,000–க்கும் அதிகமான தாய்மொழிச் சொற்களைச் சாதாரணமாகக் கற்றுப் பயன்படுத்தக்கூடும். இதுபோலவே 2–3 வயதில் குழந்தை சிறு வாக்கியங்களை உருவாக்குதல், பண்மைச் சொற்களையும் பதிலிப்பெயர்களையும் பயன்படுத்துதல், இறந்த காலம் பற்றிப் பேசுதல் போன்ற மொழித்திறன்களைக் கற்கிறது. சூழ்நிலை நிகழ்ச்சிகளில் ஆர்வமிகுந்து தொடர்ந்து பேசவும் முற்படுகின்றனர். இதன் விளைவாகச் சொற்களஞ்சிய அளவுப் பெருக்கம், வாக்கியங்களில் நீளம் அதிகரித்தல், தெளிவான உச்சரிப்பு, கேட்டும், படித்தும் புரிந்துகொள்ளும் திறன் வளர்ச்சி, எழுதும் திறன் வளர்ச்சி போல்வன எழுகின்றன. இவற்றுடன் இணைந்து சிந்தனையாற்றல் கற்பனைத்திறன், பொருளறிவு வளர்ச்சி ஆகியன நிகழ்கின்றன. பின்பற்றல், வலுப்படுத்தப் பெறுதல் போல்வன மொழி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவனவாம். மொழி வளர்ச்சி மேலே குறிப்பிட்ட வகைகளில் சீராக வளர, குழந்தையின் குடும்பச் சூழ்நிலை, மொழி வளர்ச்சிக்கான பல வாய்ப்புகள்

அமைதல், மொழி மூலமே குழந்தையுடன் பெற்றோர் உரையாடுதல் போல்வன அடிப்படையாகும்.

### 2.3.2 உடல் வளர்ச்சி மற்றும் மொழி அறிதல் திறன் வளர்ச்சி

பிறந்த குழந்தை உடல் வளர்ச்சி மற்றும் அறிதல் திறன் வளர்ச்சி அடைந்ததும் தனது முதலாவது பிறந்த நாளில் (10–14 மாதங்களில்) அடையாளம் காணக்கூடிய– தெளிவான உச்சரிப்புடன் கூடிய முதல் சொல்லைப் பேசுகின்றது. அம்மா, தாத்தா, அத்தை போன்ற சொற்கள் குழந்தையின் முதல் சொற்களாக இருக்கின்றன. எந்தச் சொல்லாக இருந்தாலும் அதனை ஒலிக்க அம்மா அல்லது மற்றவர்களைப் பின்பற்றுவதால் கற்றுக்கொள்கிறது. அம்மா என்ற சொல்லை ஒலிக்கக் கற்றுக் கொண்டதும் அதனைக் குழந்தை தன் மனத்தில் ஏற்படும் அம்மாவின் உருவத்துடன் தொடர்புபடுத்திக் கொள்கிறது. அம்மா அல்லது காப்பாளருக்குப் பிறகு குழந்தை குடும்பத்தில் உள்ள மற்றவர்களிடமிருந்தும் பல சொற்களைப் பேசக் கற்றுக்கொள்கிறது.

18 மாதங்கள் வரை குழந்தை ஒரு தனியான சொல்லைப் பேசித் தம் கருத்தைத் தெரிவிக்கிறது. அம்மா எனக்குப் பலூன் வேண்டும், அம்மா இங்கே வா, அம்மா எங்கே போன்ற எல்லாவற்றிற்கும் குழந்தை அம்மா என்ற ஒரு சொல்லை மட்டும் பேசுகின்றது. நாமும் குறிப்பால் உணர்ந்து கொள்கிறோம். 18–24 மாதங்களில் குழந்தை சிறு வாக்கியங்களைப் பேசத் தொடங்குகிறது. முதலில் முக்கியமான இரு சொற்களைக் கொண்ட வாக்கியங்களைப் பேசுகிறது. அம்மாவிடம் தண்ணீர் வேண்டும் என்று கேட்பதற்கு அம்மா தண்ணீர் என்று நிறுத்திக்கொள்கிறது. குழந்தைகள் இவ்வாறு மொழி அமைப்பைப் புரிந்துகொண்டு இரண்டுக்கு மேற்பட்ட சொற்களை வாக்கியத்தில் அமைத்துத் தங்கள் இரண்டாவது பிறந்த நாளில் (20–30 மாதங்களில்) பேசுகின்றன.

### 2.3.3 பள்ளியில் மொழித்திறன் பெறுதல்

குழந்தைகள் முன்மழலைப் பள்ளிக்குச் செல்லும்போது அம்மா, அப்பா, பொம்மை, பந்து போன்ற பெயர் சொற்களையும், வா, போ, நட, உட்கார் போன்ற வினைச் சொற்களையும், உள்ளே, வெளியே, பெரியது, சிறியது, இனிப்பு, கசப்பு போன்ற ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் சொற்களையும் கற்றுக்கொண்டு தங்கள் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. அப்போது அவர்களால் நீண்ட சிக்கலான வாக்கியங்களைப் பேச முடிகிறது. 5, 6 ஆண்டுகளில்

தொடக்கப்பள்ளிக்குச் செல்லும்போது பல வழிகளிலும் வளர்ந்தவர்களைப் போல மொழியை ஆள முடிகின்றது. இருந்தபோதிலும் குழந்தைகளின் மொழித்திறன் வளர்ச்சிப்பருவம் முழுவதும் வளர்ந்து முதிர்ச்சி பெறுகின்றது. குழந்தைப்பருவத்தில் மொழி வளர்ச்சியைவிட வேறு எந்த மாற்றமும் வேகமாக நிகழ்வதில்லை. உடல் இயக்கங்கள் போலவும், புலக்காட்சியைப் போலவும் மொழி வளர்ச்சி உதடுகள், நாக்கு, இவற்றின் அசைவுகளுக்குக் காரணமான தசைகளின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முதிர்ச்சி மற்றும் அனுபவம் ஆகியவற்றைச் சார்ந்து அமைகின்றது.

### 2.3.4 குடும்பப் பின்னணியில் குழந்தையின் மொழித்திறன்

குழந்தைகள் பள்ளிக்கு ஓரளவு மொழி வளர்ச்சியைத் தங்கள் குடும்பப் பின்னணியிலிருந்து பெற்று வருகின்றனர். குழந்தையின் மொழியில் குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்கள் பேசும் மொழியின் தாக்கம் இருக்கிறது. குடும்பப்பின்னணியைப் பொறுத்துக் குழந்தை பயன்படுத்தும் ஒலிப்பு முறை, வாக்கியத்தில் அழுத்தம் கொடுக்கும் இடம் ஆகியவை வேறுபடுகின்றன. குடும்பப்பின்னணியில் 'பூவா, ஆம், மம்மு' போன்ற உணவைக் குறிக்கும் சொற்களைக் குழந்தை தன் தாயிடமிருந்து கற்றுக் கொள்கிறது. இதனைக் குழந்தையின் தாயார் மொழி (Home Language) என்கிறோம். குழந்தைகள் பயன்படுத்தும் சொற்கள் குழந்தைகளின் வட்டார வழக்குகளுக்கு ஏற்றபடி மாறுபடுகிறது. மொழி வளர்ச்சியில் குழந்தைகள் தங்கள் வட்டாரங்களில் வழங்கப்படும் மொழியையே முதலில் கற்றுக்கொள்கின்றனர். அதனால் இந்த மொழியுடன் குழந்தைகள் பள்ளிக்கு வருகின்றனர். பள்ளிப்பருவத்தில் இது சிறிதுசிறிதாக மறைந்து விடுகின்றது.

குடும்பத்தின் பொருளாதார நிலையைப் பொறுத்தும் குழந்தையின் மொழிவளர்ச்சி வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளுக்குக் குறைவான அனுபவங்களே இருப்பதால் அவர்களின் சொல்லாட்சித் திறன் பொருளாதாரத்தில் முன்னேறிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளின் சொல்லாட்சித் திறனைவிடக் குறைவாகவே இருக்கும்.

பொருளாதாரத்தில் உயர்ந்த குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு வகை வகையான பொம்மைகள், ஆடைகள், உணவு வகைகள், வெளி அனுபவங்கள் கிடைக்கின்றன. மேலும் வீட்டில் பல வகையான வீட்டு உபயோகப் பொருள்கள்

உள்ளன. இவற்றைக் காணுவதால் குழந்தைகளின் சொற்களஞ்சியம் விரைவாக வளர்ச்சி அடைகின்றது.

அயலகத்தில் வாழும் குழந்தைகளின் மொழி வளர்ச்சியானது குடும்பத்தையும் அதனோடு தொடர்புடைய சமூகத்தையும் சார்ந்து அமைகிறது. மேலும், அயலகச் சூழ்நிலையில் வாழும் குழந்தைகளின் தாய்மொழியும், பள்ளியில் பயிலும் மொழியும் வேறுவேறாக இருக்கும்போது, தாய்மொழி கற்றலுக்கான முயற்சிகள் இயல்பாகவே அக்குழந்தையின் மொழித்திறன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

### 2.3.5 குழந்தையின் வட்டார மொழிவழக்கு

சில வட்டாரங்களில் 'இடதுகை பக்கமாகச் செல்' என்பதைப் 'பீச்சாங்கை பக்கமாகச்செல்' என்றும், வேறு சில வட்டாரங்களில் 'ஓரட்டுக் கை பக்கமாகச் செல்' என்றும் வழங்குகின்றனர். சில இடங்களில் 'தவளையைத்' 'தவக்களை' என்றும் கூறுகின்றனர். இவ்வாறே சொற்களின் உச்சரிப்பிலும் வட்டார அளவில் வேறுபாடு காணப்படுகின்றது. 'பழம்' என்பதைச் சில வட்டாரங்களில் 'பயம்' என்றும், சில வட்டாரங்களில் 'பளம்' என்றும் கூறுகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் வட்டாரத்தில் குழந்தைகளின் பேச்சுகளை உற்றுநோக்கி அவர்களின் தாயார் மொழியை அறிந்து அவற்றிற்கு இணையான தமிழ்ச் சொற்களில் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

இது போன்று சொற்சூழல் அயலகத்திலும் பன்முறையில் பயன்படுகின்றது. அதைப் பற்றிய தெளிவுகளை மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

### 2.3.6 குழந்தையின் மொழிதிறனில் தகவல் தொடர்பு ஊடகத்தின் தாக்கம்

தற்காலத்தில் தொலைக்காட்சி பெட்டி ஒரு முதன்மையான தகவல் தொடர்பு சாதனமாக மாறிவிட்டது. சிறியவர் முதல் பெரியவர் வரை தொலைக்காட்சி பெட்டியின் முன் அமர்ந்து மணிக்கணக்கில் நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். மொழிவளர்ச்சியில் வேகத்தைப் பெற்றிருக்கும் குழந்தை தொலைக்காட்சியில் பேசப்படும் மொழியை எளிதாக உள்வாங்கிக் கொள்கின்றது. மேலும் அதில் வரும் வண்ண வண்ண விளம்பரங்கள், வசனங்கள், பாடல்கள் ஆகியவற்றை ஆர்வத்துடன் உள்வாங்கிக் கொண்டு அதனைப் பேசிக்காட்டுகின்றது. முகநூல், புலனம், யூடியுப், கீச்சகம் முதலான சமூக ஊடகங்களின் வாயிலாகவும் குழந்தைகளின் மொழி வளர்ச்சி அடைகிறது.

இவ்வாறு குழந்தையின் மொழி வளர்ச்சிக்குத் தகவல் தொடர்பு ஊடகங்கள் உதவினாலும் எந்த வகையான அல்லது எவ்வளவு சரியான மொழி அமைப்புகள் பேசப்படுகின்றன என்பதும் சிந்தனைக்குரியது.

## 2.4 உள்ளடங்கிய கல்வியும் கற்பித்தல் முறைகளும்

உள்ளடங்கிய கல்வியும், அதன் கற்பித்தல் முறைகளும் விளக்கப்படுகின்றன.

### 2.4.1 உள்ளடங்கிய கல்வி

'உள்ளடக்கிய கல்வி' அல்லது 'அனைவருக்குமான கல்வி' என்பதற்கு, குறைபாடுகள் உடையோரையும் உள்ளடக்கிய அனைத்து மாணவர்களும், அருகாமையில் உள்ள முறையான பள்ளிகளில், அவரவர் வயதுக்கு ஏற்ற வெஉப்புகளில் சேர்ந்து, ஒன்றாகப் பயிலவும், பள்ளி வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பங்கேற்றிடவும், பங்களிப்பு செய்திடவும் தேவைப்படும் வசதி வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருத்தல் என்று பொருள் உரைக்கப்படுகிறது. அதாவது, அனைத்துவகை மாணவர்களும் [பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளானோர் மற்றும் செயலாற்றல் குறைபாடு உடையோர் உட்பட] ஒன்றாகப் பயிலும் வகையில், பள்ளிகளில் அவற்றின் வகுப்பறைகள், செயல்திட்டங்கள், பல்வேறு செயல்பாடுகள் ஆகியவற்றை வடிவமைத்தலையே 'உள்ளடக்கிய கல்வி' என்பது குறிக்கிறது.

குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், 'உள்ளடக்கிய கல்வி' என்னும் அணுகுமுறையில் சிறப்புத்தேவைகள் கொண்ட குறைபாடுடைய மாணவர்கள், பள்ளிநேரம் முழுவதையும் அல்லது அதன் பெரும்பகுதியை, குறைபாடுகள் ஏதுமற்ற மாணவர்களோடு நேர்ந்தே கழிக்கின்றனர்.

'உள்ளடக்கிய கல்வி' என்பதற்கு யுனஸ்கோ அளித்துள்ள வரையறை வருமாறு:

**'அனைத்துத் தரப்பினையும் உள்ளடக்கியிருத்தல்'** என்னும் செயல்முறை, அனைத்து கற்போரது பல்வகைத் தேவைகளையும் கருத்தில் கொண்டு அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கு கற்றல், பண்பாட்டு மற்றும் சமுதாய நிகழ்வுகளில் அவர்களது பங்கேற்பையும், பங்களித்தலையும் அதிக்கரித்தோடு, கல்வியினுள்ளும் கல்வியிலிருந்தும் அவர்கள் புறந்தள்ளப்படுதலைக் குறைத்திடுவதும் ஆகும்.

### 2.4.2 உள்ளடங்கிய கல்வியின் அடிப்படைக் கொள்கைகள்

பின்வருபவை, உள்ளடக்கிய கல்வியின் முக்கிய கோட்பாடுகளாகும்.

- **நட்புணர்ச்சியுடன் சேர்ந்திருத்தல் கோட்பாடு**

இது, ஒரு பொதுவான கல்விச் சமுதாயத்தில், அனைத்துக் குழந்தைகள்யும் ஒரு சேர இணைத்திடும் அணுகுமுறையைக் குறிக்கிறது.

- **சமத்துவக் கோட்பாடு**

இக்கோட்பாடு, "ஒவ்வொருவரும் அறிவு, திறன்கள் மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு சம உரிமை பெற்றவர்கள்" என்பதை வலியுறுத்துகிறது.

- **பங்கேற்றல் கோட்பாடு**

இக்கோட்பாடு, கற்பித்தல் – கற்றல் செயல்முறையில் அனைத்து செயலாற்றல் குறைபாடுடைய குழந்தைகளும், இயல்பான குழந்தைகளுக்கு சம்மாக, துடிப்புடன் பங்கேற்க வாய்ப்பளிக்கிறது.

- **ஏற்றுக்கொள்ளும் கோட்பாடு**

அனைத்து குழந்தைகளும், அவர்கள் நலிந்த பிரிவு மற்றும் விளிம்புநிலையில் உள்ளோரின் குழந்தைகளாகவோ அல்லது செயலாற்றல் குறைபாடுடைய குழந்தைகளாகவோ, யாராக இருப்பினும், அவர்கள் ஒவ்வொருவரும் பொதுப்பள்ளி வகுப்பறைகளில் சேர்ந்து பயில்வது, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளிடம் அக்கறை கொண்டவர்களால் ஏற்கப்பட்டு, வரவேற்கப்படல் வேண்டும்.

- **சிறப்பு வகுப்பறைகள் நிராகரிக்கப்படும் கோட்பாடு**

வழக்கமான பொதுப்பள்ளிகளில் செயலாற்றல் குறைபாடுடையோருக்கு கல்வி அளிப்பதற்கான சிறப்பு வகுப்பறைகளையும், குறிப்பிட்ட செயலாற்றல் குறைபாடுக்கான பள்ளிகளையும் அமைத்தலை நிராகரித்திடுவதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. அவை பாகுபாட்டை பறைசாற்றுவதாகவும், ஊக்குவிப்பதாயும் உள்ளன.

- **தனியாள் வேற்றுமைகள் கோட்பாடு**

ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறானவை என்றும். தனித்தன்மையுடையவை என்றும் உள்ளடக்கிய கல்விக்கோட்பாடு வலியுறுத்துகிறது; எனவே பல்வகை வகுப்பறைக் கற்பித்தல் முறைகளும்,

கற்பித்தல் பொருட்கள், கற்றல் தேர்ச்சியை மதிப்பிடும் நுட்பங்கள், மாணவர் கற்பித்தலுக்கு உதவியளித்திடும் சேவைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் ஆகியவையும் தேவைப்படுகின்றன. இவ்வாறாக குழந்தைகளிடம் உள்ள தனிநபர் வேற்றுமைகள் உணரப்பட்டு, அவற்றிற்கு குழந்தைகளின் கற்றல் சூழலில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன.

- **விலக்கி வைத்தலுக்கு எதிரானது**

'உள்ளடக்கியிருத்தல்' என்பது 'விலக்கி வைத்தலுக்கும்', பாகுப்படுத்துதலுக்கும், ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில் ஒதுக்கி வைத்தலுக்கும் எதிரானதாகும். செயலாற்றல் குறைபாடுடைய அல்லது கற்றலுக்கு ஏதேனும் சிறப்புத் தேவை வேண்டியிருக்கும் குழந்தைகள் அனைவரும், இயல்பான குழந்தைகளோடு சேர்ந்து கல்வி பெறவும், தரமான கல்வியைப் பெற்றிடுவதற்கான சம வாய்ப்புகளையும் அளித்திடல் வேண்டும் என்று, இக்கோட்பாடு கூறுகிறது.

- **'மாற்றம்' கோட்பாடு**

உள்ளடக்கிய கல்வி என்பது, குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கல்வி அமைப்பை மாற்றிட வேண்டுமேயொழிய, கல்வி அமைப்புக்கு ஏற்ப குழந்தைகளை மாற்ற முயற்சிப்பத்தல்ல என்னும் கோட்பாடு அடிப்படையில் அமைந்ததாகும்.

மேற்கூறிய கோட்பாடுகள், அனைத்து குழந்தைகளும் அவர்களது சாதி, மதம், நிறம், பாலினம் மற்றும் செயலாற்றல் குறைபாடுகளை கருத்தில் கொள்ளாமல், ஒரே மாதிரியான பள்ளிகளில் ஒன்று சேர்ந்து கற்கவும், தரமான கல்வியைப் பெறுதலையும், உறுதி செய்திட முயற்சிகின்றன.

### 2.4.3 உள்ளடங்கிய கல்வி அணுகுமுறைகள்

உள்ளடக்கிய கல்வி அணுகுமுறை(IE) என்பது, ஒரே கூரையின் கீழ் அமைந்த பள்ளி வகுப்பறையில் செயலாற்றல் குறைபாடுடைய குழந்தைகளுக்கும், கற்றல் குறைபாடுடைய குழந்தைகளுக்கும் இயல்புநிலையில் உள்ள குழந்தைகளுடன் ஒன்றாக கற்பிப்பதாகும். இவ்வணுகுமுறை, அனைத்துவகைக் குழந்தைகளது கற்றல் தேவைகளை, குறிப்பாக விளிம்புநிலைக்குத் தள்ளப்படுவதற்கும், ஒதுக்கி வைத்தலுக்கும் ஆளாகக்கூடிய அபாயமுள்ள குழந்தைகளது கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அதிக கவனம் செலுத்துகிறது. இதனால் அறியப்படுவது யாதெனில், செயலாற்றல்

குறைபாடுகள் உடைய மற்றும் எவ்வித குறைபாடுகளும் இல்லாத குழந்தைகள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து, பள்ளி முன் வகுப்புகளுக்கான ஏற்பாடுகள், பொருத்தமான கற்றலுக்கு உதவிடும் சேவைகள் மற்றும் வசதிகளைக் கொண்ட சாதாரண பள்ளிகள் மற்றும் சமுதாய கல்விச்சூழல் ஆகியவற்றின் மூலம் கற்றல் என்பதாகும். சுருங்கக்கூறின், பல்வகைப்பட்ட கற்போரின் தேவைகளை உள்வாங்கிக் கொண்டு, அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில், நெகிழ்வுத்தன்மை கொண்ட கல்வி அமைப்பில்தான், 'உள்ளடக்கிய கல்வி' என்பது சாத்தியமாகும்.

### 2.4.4 உள்ளடங்கிய கல்வியின் பயன்கள்

1. இக்கல்வி முறையானது கற்றலை எளிதாக்கி, வரவேற்கத்தக்கதாகவும், சமுதாயத்தில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், பயனளிக்க கூடியதாகவும் அமைகிறது.
2. எவ்வவையான கற்போரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இக்கல்வி முறை உள்ளது.
3. இக்கல்விமுறையின் மூலம் ஏதோ ஒரு காரணத்தால் பள்ளியை விட்டு விலகிய மாணவர்கள் இயல்பான மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.
4. இயலாமையுடைய குழந்தைகளும் கற்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.
5. தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும், பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளவும், சகமாணவர்களின் உதவியுடன் கற்கவும் இக்கல்விமுறை பெரிதும் துணைபுரிகிறது.

### 2.4.5 உள்ளடங்கிய கல்வியைச் செயல்படுத்துவதிலுள்ள இடர்ப்பாடுகள்

பலவவையான – வேறுப்பட்ட கற்றல் திறன்கள் கொண்ட மாணவர்களைச் சிறந்த முறையில் சென்றடைகின்ற வகையில் பலவிதமான கற்பித்தல் முறைகளை உள்ளடக்கக்கல்வி வகுப்பறைகளில் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும். சாதாரண வகுப்பறையில் அமரவைக்கப்படும் மாணவர்களுக்கு இது பயன்தருவதாகும். ஏனெனில் கற்றலில் அவர்களுடைய ஈடுபாட்டையும் இது அதிகரிக்கிறது. மாணவர்கள் அனைவரின் பதிலை அல்லது வினைகளை வலியுறுத்தும் ஒரு சூழ்நிலையிலிருந்து அறிவுமிகு குழந்தைகளும், விரைந்து கற்கும் குழந்தைகளும் கூட பயன்பெறுவார்கள். மிகவும் முக்கியமாகக், உள்ளக்கக் கல்வி வகுப்பறைகளில் வேறுபாடுகள் பற்றி வெளிப்படையான, மனந்திறந்த உரையாடல்கள் நடைமுறை ஊக்குவிக்கப்படுகிறது. மேலும்

மாற்றுத்திறன் படைத்தோரின் திறன்கள், அவர்களுடைய பண்பாட்டுப் பின்னணிகள், தேவைகள் ஆகியன மதிக்கப்படுகின்றன. பல நன்மைகள் இருந்தபோதிலும் உள்ளடக்கியக்கல்விக்கு பல தடைகள் முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. இவற்றை உள்ளடக்கியக்கல்வி எனும் தலைப்பில் UNESCO நிறுவனம் கோடிட்டுக் காட்டியுள்ளது. அவை பின்வருனவாகும்.

- **மனபான்மை**

உள்ளடக்கக்கல்விக்கு சமுதாயக் கோட்பாடுகள் மிகப்பெரும் தடைகளாகவுள்ளன. முரட்டுத்தனமானவை உடல் பழைய ஊனமுற்ற, கற்றல் பல நேரங்களில் மனப்பான்மைகள் குறைபாடுள்ள மாணவர்களையும், சிறுபான்மை பண்பாட்டைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக்கொள்வதை பலர் எதிர்க்கின்றனர். மாற்றுத்திறனாளிகளுக்கு காண்பிக்கப்படும் சில சலுகைகள், சார்புகள் (மாணவர்களிடையே) பாகுபாடுதலை உருவாக்கலாம். இதனால் கல்விப்பணிகள் தடைப்படுகின்றன. கல்வி முறையிலுள்ள குறைபாடுகளுக்கு பதிலாக உள்ளடக்கக்கல்வியின் சவால்கள் மாற்றுத்திறனாளி மாணவர்கள் மீதான சவால்களாக அவர்கள் மீது சமத்தப்படலாம்.

- **உடல் சார்ந்த தடைகள்**

சில மாவட்டங்களில் மாணவர்கள் சென்றடைய முடியாத அல்லது அவர்களுக்கு வாய்ப்பாக அமையாத பள்ளிகளுக்குச் செல்லுமாறு உடல் ஊனமுற்ற மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். பொருளாதார ரீதியாக வசதிகளற்ற பள்ளிமுறைகளில் குறிப்பாக ஊரக நாட்டுப்புறப் பகுதிகளில் உடைந்துபோன, பராமரிக்கப்படாமலுள்ள பள்ளிக்கட்டடங்கள் அவர்கள் செல்வதற்கான வாய்ப்பைத் தடுக்கின்றன.

- **உள்கட்டமைப்பு**

சிறப்புத்தேவைகளுள்ள மாணவர்களுக்குண்டான முறையாகச் சுற்றுச்சூழல் தடைகள் என்பனவற்றில் கதவுகள், செல்லும் வழிகள், மாடிப்படிகள், சாய்வுதளங்கள், பொழுதுபோக்கான பகுதிகள் – ஆகியன அடங்கும். பள்ளிக்கட்டடம் அல்லது வகுப்பறையில் நுழைவதற்கு இவை மாணவர்கள் சிலருக்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. மாடிப்படிகள், சாய்வுதளங்கள், பொழுதுபோக்கான பகுதிகள் – ஆகியன அடங்கும். பள்ளிக்கட்டடம் அல்லது வகுப்பறையில் நுழைவதற்கு இவை மாணவர்கள் சிலருக்கு தடைகளை ஏற்படுத்துகின்றன.

- **பாடத்திட்டம்**

பரிசோதனை அல்லது செய்துபார்த்தலுக்கு இடமளிக்காத அல்லது பலவகை, மாறுபட்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த அனுமதிக்காத நெகிழ்ச்சியற்ற, இறுக்கமான பாடத்திட்டமானது உள்ளடக்கியக் கல்விக்கு மிகப்பெரும் தடையாகும். புலவகையான கற்றல் பணிகளை அங்கீகரிக்காத கல்வி, படிப்புத்திட்டங்கள் மாணவர்கள் அனைவரின் பள்ளி அனுபவங்களுக்குத் தடைகளாகின்றன. மன வளர்ச்சி குன்றிய மற்றும் உடல் ஊனமுன்றவர்கள் என அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கும் கூட அவை தடைகளாகும்.

- **ஆசிரியர்கள்**

மாற்றுத்திறனாளிகளுடன் பணியாற்றிட பயிற்சிபெறாத, விருப்பமில்லாத, ஆர்வமில்லாத ஆசிரியர்கள் உள்ளடக்கியக் கல்வியின் வெற்றிக்கு மிகப்பெருந்தடைகளாவர். பயிற்சிகளால் பலநேரங்களில் உண்மையாக திறம்பட செம்மையாக அமைவதில்லை. ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் பணிச்சுமையில் துன்புற்றுக்கொண்டிருக்கின்றனர். ஏற்கெனவேயுள்ள ஒரே அல்லது அதே பாடங்களை பல்வேறு அணுகுமுறைகள் வாயிலாக நடத்த வேண்டிய புதிய பொறுப்புகளை ஏற்க அவர்கள் கோபமடையலாம்.

ஆர்வமில்லாத ஆசிரியர்கள் உள்ளடக்கியக் கல்வியின் வெற்றிக்கு ஏற்கெனவே கடுமையான மிகப்பெருந்தடைகளாவர். பயிற்சிகளால் பலநேரங்களில் உண்மையாக திறம்பட செம்மையாக அமைவதில்லை. ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் பணிச்சுமையில் துன்புற்றுக்கொண்டிருக்கின்றனர். ஏற்கெனவேயுள்ள ஒரே அல்லது அதே பாடங்களை பல்வேறு அணுகுமுறைகள் வாயிலாக நடத்த வேண்டிய புதிய பொறுப்புகளை ஏற்க அவர்கள் கோபமடையலாம்.

- **மொழியும் செய்தித்தொடர்பும்**

மாணவர்களுக்குப் புதிதாக உள்ள, அவர்களுக்குத் தெரியாத ஒரு குறிப்பிட்ட மொழியில் கற்பிக்கப்படும் பொழுது அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டுமென மாணவர்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். கற்றல் வெற்றி பெற இது மிகவும் முக்கியமான தடை என்பது தெளிவாகும். அடிக்கடி இந்த மாணவர்கள் பாகுபடுத்தப்படுகிறார்கள். அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பும் குறைகிறது.

## 2.5 குழந்தையும் வாழ்வியல் திறன்களும்

**வாழ்வியல் திறன்** என்பது அன்றாட வாழ்க்கையின் தேவைகளையும், சவால்களையும் மனிதர்கள் திறம்பட சமாளிக்க உதவும் தகவமைப்பையும்

நேர்மறையான நடத்தைகளையும் குறிப்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் வாழ்க்கைத்திறன் என்பதை உளவியல் திறன் என்றும் கூறுவர். இத்தகைய திறன்களை குழந்தைகள் பின்பற்றுவது தேவையாகிறது.

வாழ்வியல் திறன்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி பல பகுதிகளிலும் குழந்தை மேம்பாட்டிற்கும் சுகாதார மேம்பாட்டிற்கும் ஆதரவாக நீண்ட வரலாறு கொண்டுள்ளது. 1986 ஆம் ஆண்டில், சுகாதார மேம்பாட்டிற்கான ஒட்டாவா சார்டர் என்ற அமைப்பு சிறந்த ஆரோக்கியத் தேர்வுகள் செய்வதில் வாழ்வியல் திறன்களை அங்கீகரித்தது. குழந்தைகளின் முழு உரிமையின் வளர்ச்சிக்காக கல்வி இயக்கப்பட வேண்டும் என்று கூறி, குழந்தைகளின் உரிமைகள் மீதான 1989 ஒப்பந்தம் (CRC) வாழ்வியல் திறன்களை கல்வியுடன் இணைத்தது. உலக சுகாதார அமைப்பு (WHO) 10 வகையான வாழ்வியல் திறன்களைக் கூறியுள்ளது. மேலும் தமிழ்நாடு, பள்ளிப்பாடநூல்களிலும் வாழ்வியல் திறன்கள் அமைந்துள்ளன. அவை :

1. தன்னை அறியும் திறன்
2. சிக்கல் தீர்க்கும் திறன்
3. முடிவெடுக்கும் திறன்
4. கூர்சிந்தனைத்திறன்
5. படைப்பாக்கச் சிந்தனைத்திறன்
6. சிறந்த தகவல் தொடர்புத்திறன்
7. இணக்கமான உறவுக்கான திறன்கள்
8. பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்
9. உணர்வுகளைக் கையாளும் திறன்
10. மன அழுத்தத்தைக் கையாளும் திறன்

- **தன்னை அறியும் திறன்**

தனக்குள்ளேயே தொடர்பு கொள்ளும் ஆற்றல் வாய்க்கப் பெற்ற மாணவன், உள்ளுணர்வு உள்ளவனாகவும், சுயமாக தன்னை ஊக்குவிக்கும் தன்மையுள்ளவனாகவும் திகழ்வான். இவன் வகுப்பின் முன் தன் படைப்புகளைச் சிறப்பாகப் படைப்பதில் ஆர்வம் காட்டுவான்.

குழந்தைகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் அதற்கு பிடித்ததாகதான் இருக்கும். ஆனால், நமக்கு பிடிக்காமல் போகலாம். எனவே இவர்களின் வளர்ப்பில் தனி கவனம் செலுத்த வேண்டும். எந்த எழுது பொருட்களும் குழந்தைகளின் கையில் கிடைத்தால், பார்க்கும் இடங்களில் எல்லாம் கிறுக்கி வைப்பார்கள். இந்த குழந்தைகளுக்கு ஓவியம் வரைவதில் ஆர்வம் இருக்கிறது என்பதை அறிந்து

ஊக்கப்படுத்த வேண்டும். பாட்டு, நடனம், நடிப்பு, இசை, விளையாட்டு,பேச்சு, ஆராய்ச்சி இதில் எந்த துறையில் ஆர்வம் உள்ளது என குழந்தைகளின் செயல்பாடுகளை வைத்தே கண்டு பிடிக்கலாம்.

- **சிக்கல் தீர்க்கும் திறன்**

சிக்கலைத் தீர்ப்பது நம் வாழ்வில் உள்ள பிரச்சனைகளை ஆக்கபூர்வமாக சமாளிக்க உதவுகிறது. தீர்க்கப்படாமல் விடப்படும் முக்கியமான பிரச்சனைகள் மன அழுத்தத்தை உண்டாக்கும் மற்றும் அதனுடன் சேர்ந்து உடல் உளைச்சலுக்கு வழிவகுக்கும். சிக்கலைத் தீர்ப்பது என்பது மோதல்கள் அல்லது சிக்கல்களைக் கண்டறிந்து தீர்க்கும் செயல்முறையாகும். இது ஒரு சிக்கலை அதன் கூறு பகுதிகளாக உடைத்து, சாத்தியமான தீர்வுகளைப் பற்றி சிந்தித்து, பின்னர் சிறந்ததைத் தேர்ந்தெடுப்பதை உள்ளடக்குகிறது. சிக்கலைத் தீர்ப்பது அனைவருக்கும் ஒரு முக்கியமான திறமையாகும், ஏனெனில் இது நம் வாழ்க்கை, வேலை மற்றும் சமூகங்களில் உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து தீர்க்க உதவுகிறது.

- **முடிவெடுக்கும் திறன்**

முடிவெடுக்கும் திறன் என்பது தேவைகளைப் புரிந்துகொள்வது, ஒப்பிடக்கூடிய விருப்பங்களை மதிப்பிடுவது மற்றும் ஒரு சிறந்த விருப்பமாக சுருக்கவும். முடிவெடுக்கும் திறன்கள் ஆராய்ச்சி, சேகரித்தல் & தரவு பகுப்பாய்வு, பயனுள்ள மற்றும் திறமையான இறுதி முடிவுக்கு சரியான தீர்ப்பை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.

முடிவெடுப்பது நம் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளை ஆக்கபூர்வமாக சமாளிக்க உதவுகிறது. இது ஆரோக்கியத்திற்கு விளைவுகளை ஏற்படுத்தும். வெவ்வேறு விருப்பங்களின் ஆரோக்கிய மதிப்பீடு மற்றும் இந்த வெவ்வேறு முடிவுகள் என்ன விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பது தொடர்பாக அவர்களின் செயல்களைப் பற்றி எவ்வாறு செயலில் முடிவெடுப்பது என்பதை குழந்தைளுக்குக் கற்பிக்க வேண்டும்.

- **கூர்சிந்தனைத் திறன்**

வாழ்க்கை நிகழ்வுகள், தகவல்கள் முதலியவற்றை எந்தச் சார்புமின்றி நடுநிலையோடு பகுத்தாய்வும் திறனே கூர்சிந்தனைத் திறனாகும். நம்முடைய சிந்தனைச் செயல்பாடு இவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளை எடைபோட இக்கூர்சிந்தனைத் திறன் உதவுகிறது. மாணவர்கள் எந்தவொரு செயலைச் செய்கின்ற போதும் அதன் விளைவுகளை எண்ணி முன்கூட்டியே சிந்தித்துச்

செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால்தான் திறம்பட எண்ணியவாங்கு இருக்க முடியும்.

- **படைப்பாக்கச் சிந்தனைத்திறன்**

படைப்பாக்கச் சிந்தனை என்பது சரளமாக புதிய உத்திகளை உருவாக்குதல் ஆகும். மொழியின் அடிப்படைத்திறன்களை சரியாக பயன்படுத்தியவன் புதியன படைக்கின்ற ஆற்றலைப் பெற்றிருப்பான். அதனால் சிந்தனைத்திறன் அதிக்கரிக்கும். எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் இயல்பாக இருக்கும் குழந்தைக்களுக்கு படைபாற்றல் வளரும். கவிதை, கதைக்கூறுதல் சிந்தனைத்திறன் மிளிரும்.

- **சிறந்த தகவல் தொடர்புத்திறன்**

**சிறந்த** தகவல்தொடர்பு என்பது, நமது கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான வழிகளில் வாய்மொழியாக வெளிப்படுத்த முடியும். கருத்துக்கள், ஆசைகள், தேவைகள் மற்றும் அச்சங்களை வெளிப்படுத்த முடியும். தேவைப்படும் நேரத்தில் ஆலோசனை மற்றும் உதவி கேட்க முடியும்.

மனித உறவுகளுக்கு தொடர்பு அவசியம். நல்ல தகவல்தொடர்பு மட்டுமே உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் உங்கள் தொழில்முறை வாழ்க்கையிலும் வெற்றிகரமான ஒருவருக்கொருவர் உறவுகளை ஏற்படுத்த முடியும்.

தகவல்தொடர்பு மூன்று வழிகளில் கேட்க/பகிர்ந்து கொள்ள முடிகிறது. அவை :

1. வாய்மொழி
2. எழுத்து
3. மின்னணு ஊடகம்

- **இணக்கமான உறவுக்கான திறன்கள்**

ஒவ்வொரு பெற்றோருக்கும் தங்கள் குழந்தைகளை வெற்றியாளர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். குழந்தைகளுக்கு அவர்கள் சொல்லும் அறிவுரைகள், போதனைகள், கட்டுப்பாடுகள் என அனைத்துமே இதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையில் வெற்றியாளர்களாக நமது குழந்தைகள் மிளிர்வதற்கு அவர்களை எந்தெந்த வகையில் தயார்செய்ய வேண்டும், என்னென்ன கற்றுக்கொடுக்க வேண்டும், எப்படியெல்லாம் நமது குழந்தையை மாற்ற வேண்டும் என எப்போதும் யோசிக்கும் பெற்றோர்கள், அதற்காகச் சில விஷயங்களில் தங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

பெற்றோர்களே இல்லாத குழந்தைகள்கூட வாழ்க்கையில் வெற்றியாளர்களாக மாறியிருக்கின்றார்கள். அதனால், குழந்தைகளின் வெற்றிக்குப் பெற்றோர்கள் மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது. ஆனால், ஒரு குழந்தை தோற்றுப்போவதற்கு ஏதோ ஒரு வகையில் பெற்றோர்களின் மாற்றிக்கொள்ளாத பிடிவாதமான அணுகுமுறைகள் காரணமாக இருந்திருக்கின்றன என்பதை ஆராய்ச்சிகள் உறுதியாகச் சொல்கின்றன.

- **பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்**

நாம் தொடர்பு கொள்ளும் நபர்களுடன் நேர்மறையான வழிகளில் தொடர்பு கொள்ள ஒருவருக்கொருவர் உறவு திறன்கள் நமக்கு உதவுகின்றன. இது நமது மன மற்றும் சமூக நல்வாழ்வுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நட்பு உறவுகளை உருவாக்கி வைத்திருக்க முடியும். இது சமூக ஆதரவின் முக்கிய ஆதாரமாக இருக்கும் குடும்ப உறுப்பினர்களுடன் நல்ல உறவை பேணுவதைக் குறிக்கலாம். இது உறவுகளை ஆக்கபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவருவதையும் குறிக்கலாம்.

- **உணர்வுகளைக் கையாளும் திறன்**

குழந்தை பிறப்பின்போது பொதுவான மனவெழுச்சி பரப்பிலிருந்து, படிப்படியான வளர்ச்சி மூலம் பயம், சினம், மகிழ்ச்சி, துக்கம், அன்பு, கருணை, அருவருப்பு போன்ற பல்வேறு மனவெழுச்சிகள் கடக்கின்றனர்.

ஒருவன் எவ்வளவு மிகுதியாக நுண்ணறிவினைப் பெற்று மன ஆற்றல்களைப் பெற்றிருப்பினும், அவன் மனவெழுச்சி முதிர்ச்சி பெற்றிராமல் இருப்பின் வாழ்க்கையில் வெற்றியடைய முடியாது.

மனிதன் தனித்து வாழும் உயிரியன்று; பிறப்பு முதல் அவன் சமுதாயக் குழுக்களைச் சார்ந்து வாழுகிறான். குடும்பம், சுற்றுப்புறம், விளையாட்டுக்குழு, பள்ளி, சமுதாயம், நாடு போன்ற பல உறுப்பினர்களைக் கொண்ட சமூகக் குழுக்களுடன் தொடர்புக்கொண்டு, அவற்றின் செல்வாக்குகளுக்கு உட்பட்டே வாழ்கிறான். குழுக்களின் ஏற்பும் அவற்றின் செயல்களில் ஒன்றிப் போதலும், அவற்றினால் பாராட்டப்படுதலும் தனி மனிதனது மனத்தேவைகளை நிறைவு செய்வனவாகும். உலகத்தொடு ஒன்றி வாழ வேண்டும்.

- **மன அழுத்தத்தைக் கையாளும் திறன்**

"நான் நிறைவான மனமகிழ்ச்சியாக இல்லை" அல்லது "என்னில் ஏதோ தவறு உள்ளது" போன்ற தவறான நம்பிக்கைகள் 95% வரை அனைத்து

நோய்களுக்கும் காரணமாகின்றன. உடல், மன மற்றும் உணர்ச்சி நோய்களுக்கு மன அழுத்தம் முக்கிய காரணி என்று அறிவியல் ஆராய்ச்சி நிறுவியுள்ளது. சுயநினைவற்ற உடல், மன மற்றும் உணர்ச்சிப் பழக்கங்கள் எவ்வாறு மன அழுத்தம், முதுமை, அடிமையாதல் ஆகியவை எவ்வகையில் நோய்களை உருவாக்குகின்றன என்பதைக் கண்டறிய முடிகிறது. கோபம் அல்லது சோகம் போன்ற தீவிர உணர்ச்சிகள் நாம் சரியான முறையில் பதிலளிக்கவில்லை என்றால் நம் ஆரோக்கியத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

### 2.5.1 வாழ்வியல் திறன்களின் முக்கியத்துவம்

வாழ்வியல் திறன் கல்வி அடிப்படைக் கல்வி, பாலின சமத்துவம், ஜனநாயகம், நல்ல குடியுரிமை, குழந்தை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, கல்வி முறையின் தரம் மற்றும் செயல்திறன், வாழ்நாள் முழுவதும் கற்றல், வாழ்க்கைத் தரம் மற்றும் அமைதியை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு பங்களிக்கிறது.

வாழ்வியல் திறன்களை வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே வளர்த்துக்கொள்வது. உங்கள் பிள்ளையை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துகிறது, மேலும் தலைமைப் பண்புகளை வளர்க்கிறது, மேலும், அவை குழந்தைகளை மிகவும் இணக்கமாகவும், நம்பிக்கையுடனும், பச்சாதாபத்துடனும் இருக்க உதவுகின்றன. ஆரம்ப ஆண்டுகளில் வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதில் நாம் ஏன் கவனம் செலுத்த வேண்டும் என்பதைப் பற்றி மேலும் படித்துத் தெரிந்துக்கொள்ளலாம்.

## 2.6 தொகுப்புரை

மாணவர்களின் வளர்ச்சிநிலைக்கேற்ப அவர்களின் உள்ளமும், மொழியும் வளர்ச்சி பெறுகின்றன. மாணவர்களின் உள்ளர்ந்த திறன்களின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் நிகழ வேண்டும். மாணவர்களின் ஊக்குவித்தல், தானே கற்றல், சுய மதிப்பீடு என்ற அடிப்படையில் அவர்களைக் கொண்டு செல்வது அவசியம். ஆசிரியர்கள் மாணவர்களின் மொழி அறிவை மேம்படுத்தச் சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டுடைய செயல்களைப் பயிற்சியாக அளிக்க வேண்டும். சிறப்புத் தேவையுடையாரின் தேவைகளை அறிந்து அவர்களையும் ஊக்குவித்துக் கற்றல், கற்பித்தலில் ஈடுபடுத்த வேண்டும். அன்றாட வாழ்வியல் திறன்களைச் சரியாகக் கையாளும் திறனையும் மாணவர்களுக்கு அளிப்பது ஆசிரியரின் கடமையாகும்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
| --- |
| 1. உள்ளடங்கிய கல்வியின் கோட்பாடுகள் குறித்து எழுதுக.<br>2. உள்ளடங்கிய கல்வியின் பயன்கள் யாவை?<br>3. வாழ்வியல் திறன்கள் பற்றி குறிப்பு வரைக.<br>4. வாழ்வியல் திறன்களின் முக்கியத்துவம் குறித்து எழுதுக. |